**செய்தி வெளியீடு எண்: 087** **நாள் : 08.02.2016**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.01.2016 அன்று வணிகவரித்துறையில் e-C Tax Project (https://ctd.tn.gov.in) எனும் புதிய இணையதள சேவை துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த புதிய இணையதள சேவை மூலமாக புதிய பதிவு, நமூனாக்கள் தாக்கல் செய்தல், வரிகள் செலுத்துதல், எண்ணியல் கையொப்ப வசதி, மத்திய வரிவிதிப்பு சட்டத்திற்குட்பட்ட படிவங்கள், மதிப்புக்கூட்டு வரி தொடர்பான படிவங்கள், போக்குவரத்து தொடர்பான படிவங்களை பதிவிறக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தற்போதைய பதிவு செய்த வணிகர்கள் அனைவரும் தங்களின் பதிவு தொடர்பான விவரங்களில் மாற்றம் செய்தல், நமூனாக்கள் மற்றும் திருப்புத்தொகை தொடர்பான நமூனாக்களை இணையதளம் மூலம் தாக்கல் செய்தல் போன்ற சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து தகவல்கள் மற்றும் ஆணைகள் இணையதளம் மூலமாக அனுப்பவும், மேலும் வணிகர்கள் சீராய்வு மனு தாக்கல் செய்வதற்கும், மேல்முறையீடு செய்வதற்கும் இணையதளத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வணிகர்கள் அனைவரும் துறையின் புதிய இணையதளத்தில் தங்கள் கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் வருமானவரி கணக்கு எண் (PAN) பற்றிய விவரங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டம், மத்திய விற்பனை வரிச்சட்டம், கேளிக்கை வரிச்சட்டம் மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகன நுழைவு வரிச்சட்டம் மற்றும் தமிழ்நாடு ஆடம்பர வரிச்சட்டம் ஆகியவற்றுக்கான நமூனாக்களை உரிய வரிகளுடன் இந்த புதிய இணையதளத்தில் தாக்கல் செய்யலாம். மேலும் இவற்றுக்கான வரியை இணைய வழி அல்லது வங்கி செலுத்துச் சீட்டு (Challan) முறையில் மட்டுமே செலுத்த வேண்டும். நமூனாக்கள் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல், நமூனாக்கள் பதிவு செய்ததற்கான ஒப்புதல் மற்றும் வரிகள் செலுத்தியதற்கான ஒப்புதல் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக வணிகர்களுக்கு அனுப்பப்படும்.

வணிகர்கள் பதிவு மற்றும் பதிவு விவர மாற்றங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் https://ctd.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் மேற்கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800-103-6751ல் தொடர்பு கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வணிகர்களும் இந்த புதிய இணையதள சேவையில் தங்களின் சரியான விவரங்களை உடனடியாகப் பதிவுசெய்து முழு ஒத்துழைப்பினை நல்கிட வேண்டும் என வணிகவரித்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

முதன்மைச் செயலர் /ஆணையர்

வணிகவரித்துறை

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**